# ஆழ்வார்களின் வாழ்வியல் நிலை

**த. ஷீபா**
ஆராய்ச்சி மாணவி, கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு

**முனைவர் மா. கார்த்திகேயன்**
கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு, நாமக்கல்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**ஆய்வுச் சுருக்கம்**

இடைக்கால இலக்கியத்தில் பக்தி இலக்கியங்களே முதன்மை இலக்கியங்களாகத் தலைத்தோங்கி நிற்கின்றன. இவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்களின் வாழ்க்கையானது அவர்கள் இயற்றிய பாடல்களின் வளமைக்கு நேர் எதிராக வலியும் வேதனையும் நிறைந்தது. அவர்களின் போராட்டமிக்க வாழ்க்கையில் அவ்வப்போது நடந்த நிகழ்வுகள் அவர்கள் இயற்றிய பாடல்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. நாயன்மார்களால் இயற்றப்பட்ட சைவ இலக்கியங்களுக்கு நிகராக, ஆழ்வார்களால் வைணவம் சார்ந்த இலக்கியங்கள் வளர்க்கப்பட்டன. எக்காலத்திலும் புலவர்களால் இயற்றப்பட்ட இலக்கியங்களை அறிவதிலும் அவற்றைப் பாடி அனுபவிப்பதிலும் காட்டும் ஆர்வத்தை அவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்களைப் பற்றியும் அவர்களின் வாழ்வியல்நிலை பற்றியும் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டப்படுவதில்லை. இக்கட்டுரையின் ஆய்வு நோக்கமானது பக்தி இலக்கிய கால கட்டத்தில் வைணவ இலக்கியங்களை இயற்றிய ஆழ்வார்களின் வாழ்வியல் நிலை குறித்து அறிய முற்படுவதாக அமைகிறது.

## முன்னுரை

"இன்தமிழ் பாடினான் அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்று மதுரகவியாழ்வார் திருவாய் மலர்ந்தருளியப்படி, அருளாளர்களான பக்தி நெறிப்படி பாடிய பாவலர்கள் தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு காலங்களில் தோன்றியுள்ளனர். வைணவப் புலவர்களில், ஆழ்வார்கள் பல்வேறு அவதாரங்களாகவும் அறிவால் மேம்பட்டவர்களாகவும் வைணவ சமயச் செழிப்புக்கு உரமிட்டவர்கள் ஆவர். ஆழ்வார்களால் அருளிச்செய்யப்பட்ட நாலாயிரத்திவ்ய பிரபந்த பாசுரங்களின் போக்கினாலும் சொற்பொருள் வழக்குகளாலும் அவர்கள் கடைச்சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதனை அறியலாம்.

## பொய்கையாழ்வார் வாழ்வியல் நிலை

பொய்கையாழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் முதலாழ்வார் ஆவார். இவர் காஞ்சிபுரத்தில், ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோவிலிலுள்ள பொய்கையில் பிறந்தார். எனவே இவர் பொய்கையாழ்வார் என்று அழைக்கப்படுகிறார். இவரால் பாடப்பட்ட நூறு பாடல்களும் முதல் திருவந்தாதி எனப்படுகிறது. முதன்முதலில் விஷ்ணுவின்

பத்து அவதாரங்களையும் பாடியுள்ளார். இவர் இறையவன்மீது தீராப்பக்தியும் பேரன்பும் கொண்டவர் என்பது தெளிவாகிறது. இவர் பாடிய பாடல்களைச் "சொல்மாலை" என்றும் கூறுவார்.

**"வையம் தகளியா, வார்கடலே நெய் ஆக,**
**வெய்ய கதிரோன் விளக்கு ஆக, - செய்ய**
**சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல் மாலை**
**இடர் ஆழி நீங்குகவே என்று"** **(பாடல் எண் - 2082)**

இதற்குப் பொருள் என்னவென்றால் பூமியே அகலாகவும், கடலே நெய்யாகவும், வெப்பக் கதிர்களுடைய சூரியனே விளக்காகவும், சிவந்த ஒளியுடைய சக்கரத்தை ஏந்திய திருமால் திருவடிகளிலே துன்பக் கடல் நீங்குவதற்காக இச்சொல் மாலையைச் சாத்தினேன் என்று பாடியுள்ளார் பொய்கையாழ்வார்.

இல்லற வாழ்க்கையைவிட இறைப்பணி செய்வதையே இவர் விரும்பினார். தோள்களுடன் இணைந்த என் கைகள் திருமாலை அன்றி வேறு எவரையும் தொழ மாட்டா. என் இரு காதுகளும் அவன் இனியசொற்களையே கேட்கும். தினமும் என் நா, திருவனந்தாழ்வான் மேல் கண் வளர்பவனின் திருவடிகளையே துதிக்கும். உலகத்தார் விரும்பும் புலன் இன்பங்களை அணுக வெட்கப்படுவேன் என்று கூறுகிறார். எளிமையான அந்தண வாழ்க்கை வாழ்ந்து பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகளை உணவாகக் கொண்டு ஆச்சாரதுடன் வாழ்ந்துவந்தார். திருமாலுக்கே உரிமையான ஆத்மாவை என் பொருளாக ஆசைப்பட்டேன். உலக வாழ்விலே உழல்பவர்களுடன் சேராமல் ஸ்ரீவைஷ்ணவ அடியார்களுடனேயே உறவு கொள்வேன். திருமகள் கேள்வனை அன்றி, வேறு தெய்வங்களை வியந்து துதிக்கமாட்டேன். இப்படியான பின்பு, பாவங்கள் என்மேல் எவ்வழியில் வரமுடியும்? வராது என்று உறுதிப்பட நம்பினார். உன்ன மறந்தாலும், உறங்க மறந்தாலும், உன்னை நினைக்க மறவேன் இறைவா! என்றபடி வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கே அர்ப்பணித்தார் பொய்கையாழ்வார்.

**பூதத்தாழ்வார் வாழ்வு நிலை**

இரண்டாம் திருவந்தாதியைப் பாடியவர் பூதத்தாழ்வார். இவர் மாமல்லபுரத்தில் அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். இவர் பாடிய இந்த அற்புதத்திருவந்தாதியில் நூறு வெண்பாக்கள் உள்ளன. இவர் தம் பாடலை ஞானத்தமிழ் என்று குறிப்பிடுகின்றனர். என் நெஞ்சமே, எம்பெருமான் வாழும் நகரம் என நினைத்துப் பக்தி என்கிற தாமரை பூவைக் கொண்டு, தாமரைச் செல்வியை மார்பில் ஏற்ற திருமால் திருவடிகளைப் பணிந்து அனுதினமும் தொழுது வழிபட்டார். இவர் பகவானின் பெருமையையும் உலகச் சிறுமையையும் அறிந்து ஐம்புலன்களையும் அடக்கி இறைவனிடம் தம்மை ஈடுபடுத்தி வாசனை மிகுந்த வண்ணமலர்களால் பக்தி நிறைந்த மனத்துடன் இறைப்பணி செய்து வாழ்ந்து வந்தார்.

**அன்பே தகளியா, ஆர்வமே நெய் ஆக**
**இன்பு உருகு சிந்தை இடு திரியா, நன்புஉருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்** **(பாடல் எண் - 2182)**

அன்பாகிய பக்தியே அகலாகவும் ஆர்வமாகிய பரபக்தியே நெய்யாகவும் உருகும் இனிய என் மனமே திரியாகவும் கொண்டு ஞான வடிவமான ஆத்மா கரையப்பெற்று, பரஞானம் ஆகிய சுடர் விடும் விளக்கை நாராயணனுக்கு அடியேன் ஏற்றினேன். ஞானம் அளிக்கும் இத் தமிழ் நூலையும் இயற்றினேன் என்பகிறார் பூதத்தாழ்வார்.

பெரும் செல்வதால் தேவருலகம் அடைய முடியாது. அருளும், அன்பும், கருணையும்கொண்டு வாழ்ந்துவரும் மனிதருக்கு இறையவன் துணையுண்டு. அதுவே தேவருலகம் அடைவதற்கான வழி என்று கூறி, அவ்வழியே வாழ்ந்தும் காட்டினார். புலன் இன்பத்தை வெறுத்துப் புனிதமான தவவாழ்வை மேற்கொண்டார். திருமாலின் காதயுத்த அம்சம் போன்று பிறந்தவர் ஆவார். உலக வாழ்வைச் சிறிதும் விரும்பாமல் பரமனிடம் ஆழ்ந்த பக்திகொண்டு தன் வாழ்நாளை இனிதே கழித்தார்.

**பேயாழ்வார் வாழ்வியல் நிலை**

மூன்றாம் திருவந்தாதி பாடியவர் பேயாழ்வார் ஆவார். இவர் சென்னையில் உள்ள மயிலாப்பூர் அருகில் இருந்த குளத்தில் அதிசயமாக மலர்ந்த செவ்வரளிப்பூவில் பிறந்தார் என்று கூறப்படுகிறது. இவர் திருமாலின் கடகம் என்னும் வாளின் அம்சமாகக் கருதப்படுகிறார். அதுமட்டுமின்றி இவர் தம் சிறுவயதிலேயே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார். அவரது மனம் எப்பொழுதும் பரமனின் திருவடியையே நாடி நின்றது. மேலும் திருமாலின் திருவடியை பாமாலையாக்கி நாள் தோறும் தொழுவார். இவர் தன்னலம் கருதாப் பொதுநலம்கொண்ட மனதுடன் வாழ்ந்தார். இவர் திருமாலின் பாதம் பணியுங்கள் உங்கள் வினைகள் ஓடிப்போகும் அது மீண்டும் உங்களைத் தொடராது என்று கூறினார். ஒரு நாள் பேயாழ்வார் திருக்கோவிலூரில் உள்ள வைணவரின் வீட்டில் இருந்த போது, விளக்கு வெளிச்சத்தில் நாராயணன் நிற்பது முதலில் பேயாழ்வாருக்குத் தான் தெரிந்ததாம். இப்படி பரமனைக் கண்ட பரவசத்தில் “திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்” பாடலைப் பாடியுள்ளார்.

**“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று”** பாடல் எண் – 2282

திருவேங்கடம் சென்ற இவர் பெருமானைச் சிவனும், விஷ்ணுவும் கலந்த உருவமாகக் கண்டார். அவர் பெருமாள்மீது ஆராக்காதல் கொண்டபோது வேறு எதைப் பற்றியும் நினைக்காமல் வாழ்ந்தார். இவர் வாழ்நாளில் இறையவன்மீது கொண்ட பக்தியானது தெளிவாகிறது. பக்தி பரவசத்தால் ஒரு விதமான வெறி போல் தோன்றும்படி காட்சியளித்து, அழுவார், தொழுவார் ஆடிப்பாடி பரவசநிலையை அடைவாராம். எனவேதான் இறை பக்தியில் தன்னை முழுவதும் மறந்து போனதால் இவர் தன் பெயருக்கு ஏற்றார்போல் பேயர் போலும், பித்தர்போலும் திரிந்தாரம். எனவே பேயாழ்வார் என்றும் அழைக்கபட்டார்.

முதல் மூவரும் அந்தணர்கள் ஆவர்கள். இவர்களுடைய பாடல்கள் சமயப் பொது நோக்குடையனவாகக் காணப்படுகின்றன. எந்தவொரு காழ்ப்புணர்ச்சியும் இல்லை

**திருமழிசையாழ்வார் வாழ்வியல் நிலை**

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமழிசை என்னும் ஊரில் கி.பி.7ஆம் நுற்றாண்டில் பிறந்தவர் ஆவார். திருமழிசையாழ்வார் நான்காம் திருவந்தாதி என்னும் நான்முகன் திருவந்தாதி பாடியவர். திருச்சந்த விருத்தமானது, இவர் சைவராக இருந்தபோது சிவவாக்கியர் என்னும் சித்தராக இருந்து பாடினார். இவர் திருமாலின் ஆயுதங்களில் ஒன்றான சக்கரத்தின் அம்சமாக விளங்கினார். இவர் இறைவனின் பேரன்புமிக்க சீடராகவும் விளங்கினார். இவர் இறைவனை மட்டுமே புகழ்ந்து படுவார். பொருளீட்ட மற்றவர்களைப் புகழ்ந்து பாட விரும்ப மாட்டார். இவருக்குக் கனிகண்ணன் என்று ஒரு சீடன் இருந்தார். திருமழிசையாழ்வார்க்குத் தொண்டனாகவும் பணிபுரிந்தார். கணிக்கண்ணன் தெய்வப்புலமை வாய்ந்தவர். இவரது வாழ்த்தும், வாய்மொழியும் தப்பாது பலிக்குமென்று அக்காலத்துப்

பல்லவ அரசன் கேள்விப்பட்டுத் தன்னைப் புகழ்ந்து பாடவேண்டும். அதுவும் நான் என்றும் மாறாத இளமையுடன் இருக்க பாடல் பாடவேண்டும் என்று வற்புறுத்தி வேண்டினான். ஆனால் கனிகண்ணன்னார் மறுத்துவிட்டு நான் இறைவனை மட்டுமே புகழ்ந்து பாடுவேன்தவிர யார் புகழையும் பாடமாட்டேன் என்று கூற இதைக்கேட்ட பல்லவ மன்னன் மீண்டும் கனிகண்ணனை வேண்டினான். ஆனால் கனிகண்ணன்னார் இறைவனைத்தவிர வேறு எவரையும் புகழ்ந்து பாடாதவர். எனவே அவர் தலைநகராகிய காஞ்சிமாநகரைப் போற்றிப் பாடினார். உடனே பல்லவ மன்னன் கோபம் கொண்டு நீ என்னைப் பாடென்றால் நகரத்தைப் பாடியிருக்கிறாய். இனிமேல் இங்கிருக்க வேண்டாம் நீ சென்றுவிடு என்று கூறினான். இதைக் கேட்டு கனிகண்ணன்னார் நடந்த சம்பவத்தைத் தன் குருவாகிய திருமழிசையாழ்வாரிடம் கூறினார். அப்பொழுது அதைக் கேட்ட ஆழ்வார் “நானும் பெருமானை அழைத்துக்கொண்டு வருவேன்” என்று திருக்கோவிலுக்குள் சென்று திருவடிதொழுது

**“கணிகண்ணன் போக்கோழிந்தான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டும் – துணிவுடனே**
**செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்**
**பயந்நாகப் பாய்சுருட்டிக் கொள்”**

என்று பெருமானை மன்றாடி வேண்டினார். பெருமாளும் திரும்பியதால் காஞ்சிமாநகரம் பழையபடி போழிவு பெற்றதாம். எனவேதான் காஞ்சிப் பெருமாளுக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்னும் சிறப்பு திருப்பெயரும் ஏற்பட்டது. திருமழிசையாழ்வார் அன்பும், பக்தியும்கொண்ட எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார் எத்தனை துன்பங்கள் வாழ்வில் வந்தாலும் அவர் பணத்திற்காகப் பாடல் பாடவில்லை. இறைவனைப் போற்றி இறைப் புகழ் மட்டும் பாடி, பாடி பரவசம் அடைந்து இறைப் பக்தியோடு வாழ்ந்து இறையடி சேர்ந்தார்.

**நம்மாழ்வார் வாழ்வுநிலை**

பிறவிக் கடலில் அலையும் மக்களே! கருப்பைக் குழியை விட்டுப் பிறந்தபின் வாழ்க்கையில் சிற்றின்பம் என்னும் குழியில் விழுந்து பிறகு கிழத்தனம் அடைகிறீர்கள். இவற்றால் உங்கள் உயிருக்கு என்ன கிடைத்தது? பிறவிப் பயன் வேண்டுமானால் திருக்கருகூரில் அவதரித்த நம்மாழ்வாரின் திருவிருத்த நூலில் ஓர் அடியாவது கற்றுக் கொள்ளுங்கள் என்று கிடாம்பி ஆசான் குறிப்பிடுகிறார். இவர் இயற்றிய திருவந்தாதியைத் திருவாய்மொழி தமிழ் வேதம், திராவிட வேதம் என்று போற்றப்படுகிறது. இவருடைய பாடல்கள் வேதங்களின் சாரம் என்றும் புகழ்ந்து உரைக்கப்படுகிறது. நம்மாழ்வார் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரியில் எனப்படும் திருக்கருகூரில் மாறன்காரி-உடைய நங்கை என்பவர்களுக்கு கி.பி. 9 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருக்கு மாறன், சடாரி, சடகோபன் என்று வேறு பெயர்களும் உண்டு. நம்மாழ்வார் பற்றின்றி இறைவனுக்காக வாழ்ந்தார். இவர் பாடல்களில் உயர்ந்த தத்துவக் கருத்துகள் அமைந்து இருந்தது அதுபோலவே காதல் துறைகள் அமைத்து பாடிய பாடல்களும் உள்ளன. நம்மாழ்வார் தம்மை நாயகியாகக் கற்பனை செய்துகொண்டு நாரை, பூவை, முதலிய பறவைகளைத் திருமாலிடம் தூது அனுப்புவதாகப் பாடல்கள் பக்திச் சுவையும் இலக்கிய நயமும் உடையவையாக அமைந்துள்ளன. பன்னிரு ஆழ்வார்களுள் முதன்மையானவர் நம்மாழ்வார் எனப்படுகின்றது. நம்மாழ்வாரை உடலென்றும், மற்றவர்களை உறுப்பாகவும் உருவகித்து கூறுவது மரபாகும். நான்கு வேதங்களையே தீந்தமிழில் பாடியதால் “வேதம் தமிழ் செய்த மாறன்” என்றே புகழப்படுகிறார். “சடகோபர் அந்தாதி என்னும் நு

**திருமங்கையாழ்வார்**

திருமங்கையாழ்வார் வழிப்பறி செய்து இறைவனுக்குத் தொண்டாற்றியவர். இவர் எம்பெருமானின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான சாரங்கம் என்ற வில்லின் அம்சமாகக் கருதப்படுகிறார். இவர் சோழ மண்டலத்தில் உள்ள திருகுறையலூர் என்ற இடத்தில் நீலன் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு ஆலிநாடன், மங்கையர் கோன், குறையலாளி, மங்கையர்வேந்தன், அருள்மாரி என்று பல பெயர்கள் உண்டு. திருமால் தேவியருடன் மணமக்கள் போலக் காட்டுவழியில் வர திருமங்கையாழ்வார் அவர்களிடம் நகைகளைப் பறித்துக்கொண்டு ஓட முயன்றார். மூடியைத் தூக்க முடியாமல் திருமங்கையாழ்வார் திணறியபோது இறையவன் ஆழ்வார் செவியில் நாராயண மந்திரத்தை உபதேசித்து ஆட்கொண்டார். மணமக்கள் கோலத்தில் நாராயணன் லட்சுமி தேவியுடன் இவருக்குக் காட்சியளித்து ஓம் நமோ நாராயணா என்ற எட்டெழுத்து மந்திரத்தின் பொருளுரைத்ததாகக் கருதப்பட்டது "வாடினேன் வடிவருந்தினேன் .... நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணன் என்னும் நாமம்". இவர் திருமாலும் தன்னிடம் தமிழ் கற்க வரலாம் எனப் பாடும் பெருமித உணர்வுடையவர். மடல் என்னும் சிற்றிலக்கிய வகை தோன்றுவதற்கு வித்திட்டார். இவர் தவநெறியே மேற்கொண்டு பழங்களையும், சருகுகளையும் உண்டு குடிசைகளில் தூங்கி குளங்களில் நீராடித் தவம் செய்து வாழ்ந்தார். திருமங்கையாழ்வார் வாழ்நாள் முழுவதும் இறைவனுக்காக அர்ப்பணித்தார்.

**ஆண்டாள்**

ஆண்டாள் அருளியுள்ள நாச்சியார் திருமொழியிலிருந்து ஆண்டாள் இறையவன்மீது கொண்ட ஆழமான பக்தியும், காதல், அர்பணிப்பு பற்றி அறிய முடிகிறது. விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் மலர்வனம் அமைத்து மலர்களை மாலையாக்கிப் பெருமாளுக்கு அணிந்துத் தொண்டு செய்து வந்தார். ஒரு நாள் துளசிச் செடியின் அருகில் அழகிய பெண்குழந்தை கிடைத்தது. அந்தக் குழந்தைக்கு கோதை என்று பெயரிட்டார். கோதை வளர்ந்து மணப்பருவம் எட்டியது. கண்ணனையே மணக்க முடிவு செய்தார். ஒவ்வொரு தினமும் சிறந்த ஆடைகளை அணிந்துகொண்டு பெரியாழ்வார் தொடுத்து வைத்த மாலையை இறைவனுக்குச் சூட்டும் முன்பு, தான் அணிந்துகொண்டு தன்னைக் கண்ணனுக்கு ஏற்ற தேவியாகக் கற்பனைசெய்து கொள்வாள். இவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டே இருந்தார். அவ்வாறு செய்யும்போது பெரியாழ்வார் பார்த்துவிட்டுக் கோதையைக் கடிந்துகொண்டார். பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி, அவள் சூடிகொடுத்த மாலையைத் தனக்கு அணிவிக்குமாறு கூறினார். இறைவன் ஆண்டுகொண்ட காரணத்தாலும், சூடிகொடுத்த மாலையைச் சூடிக்கொண்ட காரணத்தாலும் பெரியாழ்வார் கோதையை ஆண்டாள் என்றும் "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" நாச்சியார் என்றும் அழைக்கலானார். வில்லிபுத்தூரை ஆயர்பாடியகவும் அங்குள்ள மகளிரை கோபியர்களாவும் கருதி நோன்பு நோற்று இறையவன் திருவருளைப் பெறுதற்குரிய "திருப்பாவை" பாடினார். மேலும் 108 திவ்யதேசங்களில் உள்ள பெருமான்களில் திருவரங்கப் பெருமானையே தாம் விரும்புவதாக கூறினார். பிறகு சூடிகொடுத்த சுடர்கொடியாகிய ஆண்டாள் திருவரங்க பெருமானோடு இரண்டறக் கலந்தாள். இதன்மூலம் ஆண்டாள் இறையவன்மீது கொண்ட தீராப் பக்தியும் மாறாக் காதலும் கொண்டாள் என்பது புலப்படுகிறது. ஆண்டாள் இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்து "நாயக நாயகி" பாவத்தில் பக்தி இலக்கியங்கள்கொண்டு இறைவன் பெருமைகளைப் போற்றிப்பாடினார். இறைவனை பிரிந்த துயரத்தில் ஆண்டாள் "மன்மதனை வேண்டல், கார்கால குயிலை வேண்டல், தோழியுடன் கனவு மகிழ்ந்துரைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டார்.

**பெரியாழ்வார் வாழ்வு நிலை**

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியவர். இவர் தாலாட்டு, செங்ககீரை, சப்பானி, தளர்நடை, புறம்புல், கல் முதலிய குழந்தைப் பருவப் பாடல்களை பாடியுள்ளார் அம்புலிப்

பருவத்தில் சாம, பேத, தான, தாண்டம் என்ற அமைப்பில் பாடும் முறையைத் தோற்றுவித்தவர் பெரியாழ்வாரே ஆவார். இவர் தன்னை யசோதையாகப் பாவித்துக்கொண்டு பாடினார். கண்ணனுடைய ஒவ்வொருப் பருவத்திற்கும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். இவர் ஸ்ரீ வில்லிபுத்தூரில் அந்தணர் மரபில் பிறந்தார். இவருக்கு விஷ்ணுசித்தர் என்ற இயற்பெயருமுண்டு. கி.பி. 9ஆம் நூற்றாண்டு இவர் வாழ்ந்த காலமாகும். பெரியாழ்வார் பாடிய திருப் பல்லாண்டு புகழ்பெற்று விளங்குகிறது.

**“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன் சேவடி செவ்லி திருகாப்பு”**

இவர் ஆண்டாளின் தந்தையும் கோதையை மணமுடித்து கொடுத்ததின் மூலம் அரங்கனுகே மாமனார் ஆனார். இவர் இறைவனுக்கு கண்னேறு கழிக்க முயன்றதால் இவர் ஆழ்வார்களில் பெரியவர் ஆனார்.

### குலசேகராழ்வார் வாழ்வு நிலை

இவர் திருவஞ்சிக்களம் என்னும் ஊரில் திடவிரதன் என்ற சேர நாட்டு அரசனுக்கு திருமாலின் மார்பில் இருக்கும் மணியான கௌஸ்துப அம்சத்தின் வடிவாக தோன்றினார். இவர் குலசேகரபெருமாள் என்றும் அழைக்கப்படுகிறார். இதற்குக் காரணம் அவர் பாடிய பெருமாள் திருமொழியிலிருந்து ஆழ்வாருடைய பக்தி மேம்பாட்டையும், தத்துவங்களையும் காணமுடிகிறது. இவர் திருமால்மீது பாடிய பாசுரங்களே பெருமாள் திருமொழி என்றழைக்கப்பட்டது. இவர் போர்க்கலைகளில் சிறந்து விளங்கினார். வடமொழியிலும் தேர்ச்சி பெற்று இருந்தார். நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிந்த இவரை இவ்வுலக மாயை நீக்கி இறை தொண்டு செய்யுமாறு திருமால் பணித்தார். இவர் தனியாகக் கோவிலையும், பிற ஆழ்வார்களுடன் சேர்ந்து ஏழு கோவில்களையும் மங்களாசனம் செய்துள்ளார். இவர் பெருமான் அருள் பாடும் இன்பம் ஒன்றே பேரின்பம் என்று கருதி வாழ்ந்தவர். இராமனுக்குத் தாலாட்டுப் பாடிய பெருமை குலசேகராழ்வாரையே சேரும். இவர் பாடிய தாலாட்டுப் பிள்ளைத்தமிழ் தாலாட்டுப் பாடல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. திருமால் அடியார்கள் உலகப்பற்று அற்றவர்கள். அரங்கனையே பற்றுக் கொண்டவர்கள். பாவம், வஞ்சம், ஆகிய தீயபண்புகள் நீங்கி ஐம்புலங்களையும் அடக்கி, இடர்ப்பாரம் நீங்கக் காலை, நண்பகல், மாலை, ஏற்பாடு, யாமம், வைகறை என்ற அறுவகைச் சிறுபொழுதிலும், தொண்டர்கள் முன்னோர் நன்னெறிகளில் நின்று பரந0!!ஸ்ரீ

### தொண்டரடிப்பொடியாழ்வார்

திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்து, மாலை கட்டி அரங்கனுக்குச் சாத்தி வந்தவர். இவரது பெயர் விப்பிர நாராயணர். இவர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர். பரத்தை ஒருத்தியின் (தேவதேவி) மையலுக்குட்பட்டுப் பின்னர் திருமால் அடிமையானவர். திருமாலின் புகழ்பாடும் அடியாராய்த் தம் பெயரைத் தொண்டரடிப்பொடி என்று மாற்றிக் கொண்டார். “திருமாலுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியவர் தொண்டரடிப்பொடியாழ்வார்.

**“பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே”** **பாடல் எண் - 873**

இவர் திருமாலின் தொண்டர்களின் காலடி மண்ணைத் தலைமேல் வைத்துக் கொண்டதால் தொண்டரடிப் பொடியாழ்வார் என்றும் அழைக்கப்படுகிறார்.

**மதுரகவியாழ்வார்**

இவர் தூத்துக்குடி மாவட்டத்தில், திருக்கோளூர் என்ற இடத்தில் பிறந்தார். மதுரகவியாழ்வார் அந்தணர் குலத்தில் அவதரித்தார். நம்மாழ்வார் அவதரிப்பதற்கு முன்னே, கருடனின் அம்சமாகவும், குமுதன் என்னும் கண அதிபருடைய அம்சமாகவும் இவர் அவதரித்தார். இளமையிலே எல்லாக் கலைகளயும் கற்று கவி பாடுவதில் வல்லவரானார். இளமையிலே செந்தமிழில் நாவிற்கினிய பாடல்களைப் பாடிய காரணத்தால் "மதுரக்கவியாழ்வார்" என்று சிறப்புடன் அழைக்கப்பட்டார். நம்மாழ்வாரைத் தெய்வமாக வணங்கியவர் மதுரகவியாழ்வார். உயிரோடு இருந்த காலத்தில், ஆழ்வார்கள் பதினொன்று பேரும் (மதுரகவியாழ்வார், நம்மாழ்வார் ஒருவரைப் பற்றி மட்டும் பாடியுள்ளதால், இந்தக் கணக்கில் அவரது பெயர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை) அவர் அருளிச் செய்த பிரபந்தகளைப் பெருமாள் கோவில்கள் தோறும் பாடிப் பரப்பினார்.

**திருபாணழ்வார்**

இவர் சைவசமயத்தில் பாணர் குடியில் பிறந்தவர். கோவிலுக்குள் செல்லவியலாது என்பதால் காவிரியின் தென்கரையிலிருந்து திருமாலை வழிபட்டார். இவர் திருமாலின் மார்பில் உள்ள மருவான ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாகப் பாணர்குலத்தில் தோன்றியவர். தீண்டத்தகாதோர் குலத்தில் தோன்றியதால் கரையின் நின்று அரங்கனைப் பாடுவார். ஒருசமயம் சாரங்கர் என்பவர் அரங்கனுக்குக் காவிரியில் இருந்து தண்ணீர்கொண்டு செல்லும்போது வழியில் நின்ற திருபாணழ்வாரைக் கல்லால் தாக்கினார். இதனால் ஆழ்வாரின் நெற்றியில் இரத்தம் வழிந்தது. இதனை அறியாது கருவறைக்கு சென்று அரங்கரைப் பார்த்தபோது அரங்கனின் நெற்றியில் இரத்தம் வழிந்தது கண்டு திகைக்க திருபாணாழ்வார் தனது பக்தன் எனவும், அடியவருக்கு ஏற்படும் துன்பம் தனக்கு ஏற்பட்டது எனக்கூறி திருபாணாழ்வாரைத் தோளில் சுமந்து கோவிலுக்குள் அழைத்து வரக்கட்டளையிட்டார் திருமால். திருமாலின் விருப்பபடி உள்ளே வந்த திருபாணாழ்வார் பிறகு உச்சிமுதல் பாதம் வரை உள்ள அங்கங்களை பற்றி பாடி, பூத உடலோடு இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இவர் பாணர், முனிவகனர், யோகிவாகனர் போன்ற பெயர்களால் சிறப்பிக்கப்படுகிறார்.

**பார்வை நூல்கள்**

1. தேவராஜன், வைணவமும் ஆழ்வார்களும் பாகம் 1, 2, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை
2. நாலாயிர திவ்யப்பிரபந்தம் பாகம் 1,2,3,4, மதி. சீனிவாசன், ஸ்ரீ வராகி பதிப்பகம்.
3. கே.ஏ. மணவாளன், ஆண்டாள், சாகித்திய அகாதெமி.
4. சோ.ந. கந்தசாமி, உலகத் தமிழிலக்கிய வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.